**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ம் நாள் வியாழக்கிழமை**
**I.A.No.09/2025 In O.S.No.89/2021**

சங்கப்பிள்ளை
(பொது அதிகார முகவர் புண்ணியமூர்த்தி) ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. சிவகுமார்
2. மாரியாயி
3. பெரியக்காள்
4. தாமரை
5. பெ. மாரியாயி
6. லதா
7. வடிவேல்
8. மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம்
9. சார் ஆட்சியர், குளித்தலை
10. வட்டாட்சியர், கடவூர் வட்டம்
11. மேற்பார்வை பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், கரூர்
12. உதவி மின் பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், கொசூர்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.M.புவனேஷ்வரி அவர்கள் முன்னிலையாகியும், 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 மற்றும் 6,7 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 5 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் இருந்து நீக்கறவு செய்யப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது கடவூர் வட்டாட்சியருக்கு சாட்சிய அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கில் மனுதாரருக்கு சாட்சியம் அளிக்க அவரது தந்தை சங்கப்பிள்ளை பொது அதிகார ஆவணம் கொடுத்திருப்பதாகவும், அதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க இருப்பதாகவும், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் மோசடியாக பட்டா மாற்றம் செய்து மின் இணைப்பு பெற முயற்சித்து வருவதாகவும், எனவே அதை பொறுத்து கடவூர் வட்டாட்சியரிடம் தாவா சொத்திற்கான பட்டா மாறுதல் உத்தரவு, அதனுடன் இணைக்கப்பட்ட கோப்புகள் ஆகியவற்றை வரவழைத்து சாட்சிய விசாரணை வழங்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே மனுவில் கண்ட கடவூர் வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பி சாட்சிய விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

2) மனுவில் எவ்வித முகாந்திரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்து விட்டு தற்போது பட்டா மாறுதல் குறித்து ஆவணங்கள் கேட்டு இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்றே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை பெற்று கடவூர் வட்டாட்சியரை இவ்வழக்கில் விசாரணை செய்ய வேண்டுமென அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவிற்கு

எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. கீழமை நீதிமன்றத்தில் மனுதாரர் தங்களுக்குரிய ஆவணங்கள் மூலம் சாட்சிகளை விசாரணை செய்தால் தான் தங்கள் வழக்கை நிரூபிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 09/2025**
**in**
**O.S.No. 89/2021**

**DRAFT / FAIR ORDER**

**D.D.19.02.2026**

**********************************